
# The Bible Standard

## (தமிழ் வெளியீடு)



“உமது வெளிச்சத்தையும், உமது சத்தியத்தையும் அனுப்பியருளும்.
அவைகள் என்னை நடத்தும்.” சங். 43:3

**“LIFT UP A STANDARD FOR THE PEOPLE”**
**Isaiah 62 : 10**

Translated from BS 875

பொருளடக்கம்

# நரகம் என்பது நித்திய வேதனை அல்ல!

**BS Tamil Version - 22**

**2013**

# நாங்களும் நரகத்தில் நம்பிக்கை கொண்டுள்ளோம்!

## ஆதியாகமத்திலிருந்து வெளிப்படுத்தின விசேஷம் வரை வேதாகமத்தில் போதிக்கப்பட்டிருக்கிற

# நரகமானது நித்திய வேதனையல்ல!

பில்லி கிரகாம் என்பவர் பல வருடங்களுக்கு முன்பாக "பரலோகமும் நரகமும்" என்ற தலைப்பில் ஒரு கட்டுரையை எழுதினார். அதில் அவர் குறிப்பிட்டிருப்பது என்னவெனில், "இயேசு விவரித்த அக்கினியானது நித்தியமாக தேவனை தேடுவதும் ஒருபோதும் தணிக்க முடியாததுமான தேடலாக இருக்கக் கூடுமோ? இதுதான் அதன் அர்த்தமா? உண்மையில் இது தான் நரகமாயிருக்கும்; தேவனுடைய பிரசன்னத்திலிருந்து பிரிந்தும், என்றென்றைக்கும் அவரிடமிருந்து விலகியிருப்பதே நரகமாகும்" என்று குறிப்பிட்டுள்ளார். மேலும், இதைப்போல, வட கரோலினா பல்கலைகழகத்தில் நடைபெற்ற ஒரு சொற்பொழிவில் அவர் அறிக்கையாகக் கூறியதாவது: "ஓர் பரலோகமும் ஓர் நரகமும் இருக்கிறதென வேதாகமம் கூறுகிறது. இது உண்மையாகவே சொல்லர்த்தமான எரி நரகமாக இருக்குமா? அக்கினி என்பது தேவனைக் குறித்த தீவிரமான தணிக்க முடியாத தீராத தாகமாக இருக்கக்கூடும் என நான் எண்ணுகிறேன்" என்றார்.

பில்லி கிரகாம் (மற்றும் பலருடைய) கூற்றுக்களையும் இதற்கொத்த மற்ற கூற்றுகளையும் இங்கே ஆர்வத்தின் அடிப்படையில் கொடுத்துள்ளோம். நரகத்தில் சொல்லர்த்த அக்கினியால் நித்தியமாக வாதிக்கப்படுதல் என்கிற பண்டைய புறஜாதிகளுடையதும் தேவனை இழிவுப்படுத்துகிறதுமாகிய, வேத வாக்கியங்களின் அடிப்படையினால் இல்லாத கோட்பாட்டைக் குறித்து பில்லி கிரகாம் தனது மனதில் உறுத்தப்பட்டுள்ளார் என்பது தெளிவாக அறிய முடிகிறது. அநேகர் மத்தியில் அவர் ஒரு பிரசங்கியாராக இருப்பதினாலும், குறிப்பாக ஃபண்டமென்டலிஸ்ட் சபையாரும் மற்றும் இவாஞ்சலிக்கல் சபையாரும் அவரை ஒரு பிரசங்கியாராக அங்கீகரிப்பதினால் அது அவருக்கு விளைவுகளை ஏற்படுத்தும் என்பதினால், நித்திய வேதனை கோட்பாட்டை தாம் மறுக்க விரும்பிய பிறகும், அதனை முற்றிலுமாக மறுக்காமல் இந்த கோட்பாட்டிலிருந்து தாம் விலகியிருக்க வேண்டுமென்று விரும்புகிறார்.

பில்லி கிரகாமுக்கோ (மற்றும் இதரபல பிரசங்கியார்களுக்கோ) ஒருவேளை ஒரு எலியையோ அல்லது பாம்பையோ துன்புறுத்தும்படி அவர்களுக்கு வல்லமையோ அல்லது அதிகாரமோ அளிக்கப்பட்டிருந்தாலும்கூட, நிச்சயமாக கொஞ்ச நேரமோ அல்லது சதாகாலமும் அவைகள் அக்கினியில் வாதிக்கப்பட வேண்டுமென்று தங்களுடைய மனதில் ஒருபொழுதும் சிந்திக்கமாட்டார்கள் என தாங்களே உணர்ந்திருக்கிறார்கள். ஆனபடியினால், எப்படிப்பட்ட பாவியாயிருந்தாலும், நம்முடைய நீதியும் அன்புமுள்ள பரலோக பிதாவானவர் ஏன் தமது மனுஷ சிருஷ்டிகளை இவ்வாறாக துன்புறுத்தப்படும்படி கட்டளையிடுகிறார்? நம்முடைய சத்துருக்களையும் சிநேகியுங்கள் (மத். 5 : 44) என்று நமக்கு கற்றுத்தந்த நம்முடைய அன்புள்ள தேவனானவர், தம்முடைய சொந்த கற்பனைக்கு தாமே எதிராக செல்லவும், தம்முடைய விரோதிகளை மிகவும் துன்புறுத்தி அவர்களை சித்திரவதை செய்வதோடுமட்டுமல்லாமல், நித்தியா நித்திய காலமளவும் அவர்களை வாதிப்பாரோ?

## நரகம் என்ற ஒன்று இருக்கிறது

"நரகம் இருக்கிறதென வேதாகமம் போதிக்கிறது" என்று பில்லி கிரகாம் கூறுவதை நாங்களும் மனதார ஒத்துக்கொள்கிறோம். வேதாகமத்தை உண்மையாய் விசுவாசிக்கிறவர்கள் நிச்சயமாக, "நான் நரகத்தை நம்புவதில்லை" என்றோ, அல்லது "பூமியில் இந்த ஜீவியம் தான் நரகம்" என்றோ சொல்லமாட்டார்கள். ஆதியாகமத்திலிருந்து வெளிப்படுத்தல் வரை வேதாகமத்தின் அநேக இடங்களில் இந்த ஜீவியத்திற்கு பின் நரகம் இருக்கிறதென தெளிவாக போதிக்கப்பட்டிருக்கிறது. நாங்கள் நரகத்தை நம்புகிறதில்லை என சிலர் கூறுகிறார்கள். அது முற்றிலுமாக தவறு. நாங்களும் நரகத்தின் மீது நம்பிக்கை கொண்டுள்ளோம். நரகமானது வேதாகமத்தில் ஆதியாகமம் முதல் வெளிப்படுத்துதல் வரை போதிக்கப்பட்டிருக்கிறது. உண்மையில், வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிற அனைத்து மூன்று நரகங்கள் மீதும் நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம். அவை பழைய எபிரேய மற்றும் கிரேக்க பதங்களில் **(1)** ஷியோல் (Sheol) அல்லது ஹேட்ஸ் (Hades) **(2)** கெஹென்னா (Gehenna) என்றும் **(3)** டர்டாரூ (tartaroo) என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் நித்திய வேதனையையும் பாவத்தின் தண்டனையாக துன்மார்க்கர் சொல்லர்த்தமான அக்கினியில் தண்டிக்கப்படுவார்கள் என்று வேதாகமம் போதிக்கிறது என்று கூறுவதை மறுக்கிறோம். நாங்கள் இதனை நம்புகிறதில்லை.

புதிய ஏற்பாட்டில் டர்டாரூ (tartaroo) என்ற கிரேக்க (வினைச்சொல்) வார்த்தை ஒரே ஒரு முறை வருகிறது. அது "சிறை அல்லது காவலில் வைத்தல்" என்று மொழிபெயர்க்கப்படுவதற்கு பதிலாக "நரகத்திலே தள்ளி" என தவறாய் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. விழுந்து போன தூதர்கள்

**COURTESY BY :**

THE BIBLE STANDARD -(ISSN: 1556-8555) Publisher, the **Laymen's Home Missionary Movement-Bible Standard Ministries,** 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700, U.S.A. **Editor**, Ralph M. Herzig. Periodicals Postage paid at Kutztown, PA. **Postmaster:** Send address corrections to The Bible Standard, 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700; **Rates**: **One year's subscription** - $ 12.00 (6 issues); single issues-$2.50 each. **Web Site:** *www.biblestandard.com*

நம்முடைய பூமியின் வான மண்டலத்தில் சிறை வைக்கப் பட்டுள்ளனர். (2 பேது. 2 : 4; யூதா 6; எபே. 2 : 2; 6 : 12). கிரேக்க புராணத்தில் 'டர்டாரஸ்' (Tartarus) என்பது அந்தகாரமான இருட்டுச் சிறை என்று பொருள்படும். [இந்த டர்டாரஸ் என்ற வார்த்தையானது டர்டாரூ [tartaroo] என்ற வினைச்சொல்லிலிருந்து மருவி வந்தது ஆகும்.] வேதாகமத்தில் இந்த வார்த்தையானது மனுஷர்களுக்கு சம்பந்தப்படுகிறவிதமாய் சொல்லப்படவில்லை, ஆனால் விழுந்துபோன தூதர்களுக்கு சம்பந்தப்படுத்தி சொல்லப் பட்டிருக்கிறது. இதனைக் குறித்து அப்போஸ்தலன் கூறுகை யில், "**பாவஞ்செய்த தூதர்களைத் தேவன் தப்பவிடாமல், அந்தகார சங்கிலிகளினாலே கட்டி சிறை வைத்திருக்கிறார்** tartarused" – அதாவது காவல் பண்ணியிருக்கிறார் என்றும் "**மகா நாளின் நியாயத்தீர்ப்புக்கென்று நித்திய சங்கிலிகளினாலே கட்டி, அந்தகாரத்தில் அடைத்து வைத்திருக்கிறார்**" என்கிறார். இதனை விரிவாக நாங்கள் இங்கே குறிப்பிடவில்லை. (மேலும் விபரங்களுக்கு "ஆவி மார்க்கம் பிசாசின் மார்க்கம்" என்ற பத்திரிக்கையை வாசிக்கவும்).

## ஹேடீஸ்–ல் நித்திய வேதனை இல்லை

ஹேடீஸ் என்ற கிரேக்க வார்த்தையும் ஷியோல் என்ற எபிரேய வார்த்தையும், "நரகம்" (Hell) என்று Kings James மொழிப்பெயர்ப்பிலும் மற்றும் சில வேதாகம மொழிப்பெயர்ப்புகளிலும் மொழியாக்கம் செய்யப்பட் டுள்ளது. இந்த கிரேக்க மற்றும் எபிரேய வார்த்தைகளில் வாதிக்கப்படுதல் என்ற கருத்து முற்றிலுமாக காணப்பட வில்லை. ஷியோல் என்ற எபிரேய வார்த்தை பழைய ஏற்பாட்டிலும், ஹேடீஸ் என்ற கிரேக்க வார்த்தை புதிய ஏற்பாட்டிலும் உபயோகிக்கப்பட்டுள்ளது. ஹேடீஸ் என்ற வார்த்தை ஷியோல் என்ற வார்த்தைக்கு ஒத்த வார்த்தை யாக உபயோகிக்கப் பட்டுள்ளது. (சங். 16 : 10 மற்றும் ஓசியா 13 : 14–ஐ அப். 2 : 31 மற்றும் 1 கொரி. 15 : 55 ஒப்பிட்டு பார்க்கவும்).



"நீ போகிற பாதாளத்தில் செய்கையும் வித்தையும் அறிவும் ஞானமும் இல்லையே." (பிர. 9 : 5, 10)

ஹேடீஸ் என்ற கிரேக்க வார்த்தை 11 முறை புதிய ஏற்பாட்டில் காணப்படுகிறது. அதில் 10 முறை பாதாளம் (நரகம்) என்றும் ஒருமுறை "கல்லறை" என்றும் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. எபிரேய வார்த்தை யாகிய ஷியோல் 65 முறை பழைய ஏற்பாட்டில் காணப்படுகிறது. அதில் 31 முறை "கல்லறை – பாதாளம் – grave" என்றும், 31 முறை "நரகம்" hell என்றும், மூன்று முறை "குழி" Pit என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

வேதாகமத்தின் நரகம் என்ற எமது சிறுபுத்தகத்தில், ஹேடீஸ் மற்றும் ஷியோல் காணப்படுகிற அனைத்து வசனங்களைப் பற்றியும் அதில் ஓர் பரிசோதனை விளக்கமாக கொடுக்கப்பட்டிருக்கிறது. (The Chart of God's Plan, E-Vol 16, Chap. 4–லிலும் கொடுக்கப்பட்டிருக்கிறது). இவற்றைஆராய்ந்து பார்த்தால், நித்திய வேதனை என்ற கருத்து இந்த இடங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன என்பதற்கு சிறிதளவும் வாய்ப்பே இல்லை. மேலும் நல்லாரும் பொல்லாரும் தங்கள் மரணத்தில் அங்கு செல்கின்றனர். இயேசுவும் தமது மரணத்தில் அங்கே சென்றார். (சங். 16 : 10; அப். 2 : 27). அது பாதாளத்தில் ஓர் சுயநினைவில்லாத, ஒன்றும் அறியாத நிலையாகிய மரித்த நிலைமையைக் குறிக்கிறது. "**செய்யும்படி உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ, அதை உன் பெலத்தோடே செய்: நீ போகிற பாதாளத்திலே** [ஷியோலிலே (எபிரேயம்)] **செய்கையும் வித்தையும் அறிவும் ஞானமும் இல்லையே**" (பிர. 9 : 5, 10). இதுதான் ஆதாமினாலுண்டான மரண நிலைமையாகிய முதலாம் நரகம் ஆகும். இந்த நிலையிலிருந்து மரித்தோர் யாவரும் உயிர்த்தெழுதலில் மறுபடியும் எழுந்திருப்பார்கள். (ஏசா. 26 : 19; யோவா. 5 : 28, 29).

## நரகத்தில் (ஹேடீஸில்) ஐஸ்வரியவான்

நரகத்தில் [ஹேடீஸ்–யில் (கிரேக்கம்)] ஐஸ்வரிய வான் "வாதிக்கப்பட்டு கொண்டிருக்கிறான்" என இயேசு லூக். 16 : 23–ல் குறிப்பிடுகிறாரே? இது குறித்து என்ன? என்று சிலர் கேட்கலாம். ஐஸ்வரியவான் லாசரு என்ற உவமையானது தெளிவாக, யுக மாறுதலைப் பற்றியும் சுவிசேஷ யுகத்தில் தேவனுடைய விசேஷ உடன்படிக்கையின் தயவு யூதரிடமிருந்து புறஜாதிகளுக்கு மாறியதைப் பற்றியும் குறிப்பிடுகிறது. (லூக். 16 : 16). யூத யுக முடிவில் (மத். 21 : 43 மற்றும் 23 : 37–39), யூதர்கள் விசேஷித்த தேவ தயவாகிய தங்கள் ஐஸ்வரியமான நிலைமையிலிருந்து மரித்துப்போனார்கள் என ரோமர் 11–ஆம் அதிகாரம் காட்டுகிறது. சுவிசேஷ யுகத்தில் அவர்கள் சிதறடிக்கப்பட்ட போது, உபத்திரவத்திற்குள்ளாகி வாதிக்கப்பட்டார்கள். குறிப்பாக, ஹிட்லரின் அக்கினி போன்ற துன்பங்களும் அவர்களின் வாதிக்கப்படுதலில் அடங்கும். அதுபோல, புறஜாதியாராக காட்டப்பட்டிருக்கிற லாசருவோ தேவ தயவிலிருந்து அந்நியராக்கப்பட்ட நிலைமைக்கு மரித்து போனான். ஆனால் கிறிஸ்துவை தங்கள் இரட்சகராகவும் ஆண்டவராகவும் ஏற்றுக் கொண்டவர்கள் "**உத்தம இஸ்ரவேலரோடு**" கூட தேவனுடைய உடன்படிக்கையின் தயவுகளில் உயர்ந்தவைகளைப் பெற்றார்கள். அவர்கள், சுவிசேஷ யுக சபையின் அங்கமாக இருந்து, உவமையில் ஆபிரகாமின் மடி என்று சித்தரிக்கப்பட்டிருக்கிற தேவ தயவின் விசேஷ ஸ்தானத்தைப் பெற்றார்கள்.

இந்த உவமையை மையமாக வைத்து, ரோமர் 11–ஆம் அதிகாரமானது யுக மாறுதலையும், யூதரிடமிருந்து புறஜாதிகளுக்கு தேவ தயவு கைமாறியதையும் காட்டுகிறது. இதில் புறஜாதிகளுக்கு தேவ தயவு கைமாறியது என்று கூறப்பட்டிருப்பது பொதுவான மனுக்குலத்துக்கு அல்ல. மேலும் விபரமானது எங்கள் "வேதாகமத்தின் நரகம்" என்ற சிறுபுத்தகத்திலும், BS 371–லும் கொடுக்கப்பட்டுள்ளது. சுவிசேஷ யுகத்தில் யூதருடைய விசேஷமான "**வேதனைகள்**" முடிவுக்கு வருகிறதையும், மறுபடியும் அவர்கள் தேவ தயவினால் தங்கள் சுயதேசத்திற்குத் திரும்புகிறதையும், தங்கள் குருட்டாட்டத்திலிருந்து படிப்படியாகத் திரும்புகிற

தையும், அதின் மூலமாய் அவர்கள் இரட்சிக்கப்படுவதையும் கண்டு நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம். (ரோம. 11 : 25; 'யூதர்களின் நம்பிக்கைகளும் எதிர்கால பலன்களும்' என்ற எங்களது இதழை வாசியுங்கள்).

## கெஹென்னா–வில் நித்திய வேதனை இல்லை

அப்படியானால், கெஹென்னா என்ற கிரேக்க பதம் குறிப்பது என்ன? அது துன்மார்க்கர்களை நித்தியமாக வேதனைப்படுத்துவதற்குரிய ஓர் இடத்தை குறிப்பிடுவதற்கு உபயோகப்படுத்தப்படுகிற சொல் இல்லையா? கிரேக்க வார்த்தையாகிய கெஹென்னா, புதிய ஏற்பாட்டில் 12 முறை காணப்படுகிறது. அவை எல்லா இடங்களிலும் 'நரகம்' (Hell) என்று மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளது. கெஹென்னா என்பது கெஹின்னோம் (gehinnom) என்ற எபிரேய வார்த்தையிலிருந்து கிரேக்க வழி வந்த சொல் ஆகும். கெஹன்னோம் என்பது "**இன்னோம் பள்ளத்தாக்கு**" என்று மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளது. வேதாகமத்தில் அது முதன் முதலில் யோசு. 15 : 8; 18 : 16–ஆகிய வசனங்களில் எருசலேமின் எல்லை அருகே உள்ள ஒரு பள்ளத்தாக்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன் பின்பு, இன்னோம் பள்ளத்தாக்கானது இஸ்ரவேலர்களாலும், ஆகாஸ் மற்றும் மனாசே போன்ற சில இராஜாக்களாலும் கூட மிக கொடூரமான முறையில் விக்கிரக ஆராதனை செய்யப்படும் இடமாக இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. (2 ராஜா. 16 : 3; 17 : 17; 21 : 6; 2 நாளா. 28 : 3; 33 : 6). இஸ்ரவேலர்கள் புறஜாதிகளுடைய கடவுளாகிய மோளேகுக்கு அங்கே ஒரு விக்கிரகத்தை ஏற்படுத்தினார்கள் என வரலாறு நமக்கு சொல்கிறது. பல்வேறு தோப்புகளில் அவர்கள் முறையில்லாத வழிகளில் வழிபாடுகளை செய்தார்கள். அதன்பின் இன்னோம் பள்ளத்தாக்கை மோளேகுக்கு மிக அருவருப்பான முறையில் பலியிடும் ஸ்தலமாக மாற்றினார்கள். பித்தளையால் செய்யப்பட்ட இந்த மாபெரும் விக்கிரகத்தின் அடிப்பகுதியிலிருந்து நெருப்பு போடப்படும். இந்த நெருப்பானது அதின் நடுவிலுள்ள துவாரத்தின் வழியாக கீழிருந்து மேல் வரைக்கும் எரியும். இவ்விதமாக எரிந்து சிவந்திருக்கும் விக்கிரகத்தின் சூடான கைகளில் குழந்தைகளை வைப்பார்கள். இப்படியாக கொடுமையான முறையில் பலியிடுகையில் குழந்தையானது அழுகிறபோது, இந்த விக்கிரக ஆராதனைக்காரர்கள் ஆரவாரத்திலும், இசை வாத்தியங்களின் சத்தத்திலும் மூழ்கியிருப்பார்கள்.


இஸ்ரவேலர்கள் புறஜாதிகளுடைய கடவுளாகிய மோளேகுக்கு அங்கே ஒரு விக்கிரகத்தை ஏற்படுத்தி அதில் தங்கள் பிள்ளைகளை பலியிட்டார்கள். எரே. 32 : 35.

இவ்விதமான மனுஷத்தன்மையில்லாத கொடூரமான அனைத்து காரியங்களும், உண்மையில், சித்திரவதைக்கு தொடர்புடைய எதுவானாலும் கடுமையான கண்டிப்பான முறையில் இஸ்ரவேலருக்கு தேவ கட்டளையின்படி தடை செய்யப்பட்டிருந்தது (லேவி. 18 : 21; 20 : 2-5; உபா. 18 : 10). தேவன் இதனை ஒரு "**பாவம்**" என்றும் "**இது அருவருப்பு**" என்றும், "**இவைகளை நான் கற்பித்ததுமில்லை, சொன்னதுமில்லை, இவைகள் என் மனதில்** (இருதயத்தில்) **தோன்றினதுமில்லை**" என்று உரைக்கிறார். (எரே. 7 : 31; 19 : 5; 32 : 35).

மகா ஞானமும், நீதியும், அன்பும், வல்லமையுமுடைய நமது யேகோவா தேவன், சிறு குழந்தைகள் இவ்வாறாக கொடுமைப்படுத்தப்பட்டு மரணத்திற்குள்ளாக எரிக்கப்பட்ட இந்த கொடூர விக்கிரக வழிபாட்டு முறையை ஒரு பாவமென்றும், ஓர் அருவருப்பு என்றும் தம்முடைய இருதயத்திலும் மனதிலும் இருந்து அவை தோன்றினதில்லை என்றும் அவர் கூறியிருப்பதினால், கோடிக்கணக்கான தம்முடைய சிருஷ்டிகளை நெருப்பில் சில நிமிடங்களுக்கு மாத்திரமல்ல, ஆனால் நித்திய காலமளவும் வாதிப்பார் என்று சிலர் சொல்லுவதென்பது நம்முடைய தேவன் மீது சொல்லுகிற மாபெரும் பயங்கரமான கனவீனப்படுத்துகிற தூஷிப்பு ஆகாதா?

யூதாவின் நல்ல இராஜாவாகிய யோசியா எவ்வாறாக மோளேகு வழிபாட்டையும், மொத்த விக்கிரக வழிபாட்டையும் அழித்து, தேசத்தில் சீர்திருத்தத்தை ஏற்படுத்தினான் என்று 2 ராஜா. 23 : 10 ஆம் வசனமும் அது சம்பந்தப்பட்ட காரியங்களும் நமக்குக் கூறுகின்றன. இதன் பின்பு இன்னோம் பள்ளத்தாக்கு '**தோப்பேத்**' (Topheth) என்ற புதுபெயரால் அழைக்கப்பட்டது. தோப்பேத் என்றால் எரிகிற இடம் என்று பொருள்படும். ஓசியா இராஜா ஏற்படுத்திய சீர்திருத்தத்திற்கு பிறகு, இந்த இடம் ஒரு அசுத்தமான இடம் என்றும், ஆகையால் இதற்கு பின்பு மதசம்பந்தமான வழிபாடுகளுக்கோ, பலிகளுக்கோ அல்லது பண்டிகைகளுக்கோ அது தகுதியான இடமாக இராது எனக் கருதப்பட்டது. இந்த இடமானது குப்பைகளையும், நகரத்தின் கழிவுகளையும் (மிருகத்தின் கழிக்கப்பட்ட பாகங்களை) எரிக்கிற இடமாக மாறியது.

பொதுவான சமயங்களில், பட்டணங்களில் மரிப்பவர்களை எருசலேமிற்கு கிழக்கே உள்ள யோசபாத் பள்ளத்தாக்கில் அடக்கம் பண்ணுவார்கள். ஆனால், சில முக்கியமான கொடூரமான குற்றவாளிகளின் பிரேதங்கள் யாவும் கெஹென்னாவில், அதாவது இன்னோம் பள்ளத்தாக்கில் போடப்படும். அங்கே இந்த பிரேதங்கள் புழுக்களுக்கும் அக்கினிக்கும் இரையாகும். குற்றங்களும் குற்றவாளிகளும் ஜனங்களுடைய கண்களுக்கு வெறுக்கத்தக்கதாக இருக்க வேண்டும் என்பதற்காக இவ்வாறாக செய்யப்பட்டது. அடக்கம் பண்ணப்படுவதற்கு பாத்திரமாய் இல்லாத மிக மோசமான குற்றவாளிகள் இவ்வாறாக இன்னோம் பள்ளத்தாக்கில் எறியப்பட்டனர். ஆனால் உயிருள்ள ஜீவன்கள் ஒருபோதும் இந்த பள்ளத்தாக்கில் போடப்படவில்லை; ஏனெனில் எந்த சிருஷ்டியையும் துன்புறுத்துவதற்கு யூதர்கள் தேவனால் தடைசெய்யப்பட்டிருந்தனர்.

இயேசுவினுடைய உதாரணங்கள் யாவும் சொல்லர்த்தமான கெஹென்னாவை அடிப்படையாக கொண்டதாயிருந்தது. அதாவது, நகரத்தின் குப்பைகளும், கழிவுகளும் கந்தகமும் அக்கினியும் இருந்தவற்றில் வீசப்பட்டது. அங்கே எளிதில் பற்றி எரிய கூடிய யாவும் அழிக்கப்பட்டன. அக்கினியால் அழிக்கப்படாவைகள் எவைகளோ அவைகளில் புழுக்கள் உண்டாகி அதன் பின் அவை பெருகி நெருப்பினால் எரிந்து அழிந்தது போலவே முற்றிலுமாக அழிக்கப்பட்டன. புழுக்களும் அக்கினியும் இணைந்து அழிக்கும் வேலையை நிறைவேற்றியது. அங்கே அக்கினி அணையாமல், எரிக்கப்படக் கூடியவைகளை முற்றிலுமாக அழிக்கும் வரைக்கும் எரித்தது (மாற். 9 : 44, 46, 48). இது முடிவில்லாத நித்தியகாலமும் எரிகிற அக்கினியையோ நித்திய காலமாக வாழும் புழுக்களையோ குறிப்பிடவில்லை. ஆனால், புழுக்கள் இந்த சடலங்களை முற்றிலுமாக அழிக்கும் வேலையை செய்தாலொழிய அந்த புழுக்கள் சாவதில்லை அல்லது அந்த சடலத்தைவிட்டு போவதுமில்லை. வேதாகம அர்த்தத்தின்படி கெஹென்னா என்ற வார்த்தையானது, 'அக்கினியில் நித்தியமாக வேதனைப் படுத்துதல்' என்ற கருத்தைக் கொடுக்கவில்லை. மாறாக, இறுதியில் சாத்தானையும் அவன் வழிகளையும், முறைகளையும் பின்பற்றிப் போகிற திருத்தமுடியாத துன்மார்க்கர்களுடைய முற்றிலுமான, முடிவான நித்திய அழிவை இது குறித்துக் காட்டுகிறது.

## அக்கினிக் கடல்

வெளி. 19 : 20; 20 : 11, 14, 15; 21 : 8 ஆகிய வசனங்களில் கூறப்பட்டுள்ள அக்கினிக்கடல் என்பது சொல்லர்த்தமான அக்கினியில் உணர்வுவோடு கூட நித்தியமாக வாதிக்கப்படுகிற இடத்தைக் குறிக்காதா? என்று சிலர் சொல்லலாம். இதற்கு நம்முடைய பதில், இல்லை என்பதே. கெஹென்னாவைப் போலவே இதுவும் நிரந்தரமான முற்றிலுமான, நித்திய அழிவை குறிக்கிறது. அக்கினிக் கடலைக் குறித்து வெளி. 20 : 14; 21 : 8-ல் கூறப்பட்டுள்ள வாக்கியங்கள் வெளிப்படையாக "இது இரண்டாம் மரணம்" என்பதைக் குறித்துக்காட்டுகிறது.

இங்கே ஒரு சரியான வர்ணனையைக் கொடுக்கிறோம். ஒரு மனிதன் ஒரு படத்தை சுட்டிகாட்டி, இது எனது தந்தை என்று சொன்னால், அந்த படமானது நிச்சயமாக அவனது தந்தை அல்ல, ஆனால் அது தனது தந்தையை பிரதிபலிக்கிறது என்பதாகும். இதைவிட மற்றுமொரு மேலான உதாரணம் என்னவெனில், கடைசி இராப் போஜனத்தை இயேசு ஆசரிக்கையில், அப்பத்தைக் குறித்து "**இது என் சரீரமாயிருக்கிறது**" (சரீரத்தைக் குறிக்கிறது) என்றார் (லூக். 22 : 19). இயேசு தாம் உபயோகித்த அப்பமானது ஏதோ சில மறைமுக கருத்திலோ அல்லது வேறு ஏதாவது கருத்திலோ தமது சரீரமேயாகும் என்று குறிப்பிடவில்லை; ஏனென்றால் அப்பொழுது அவர் அவ்வாறு கூறுகையில் அவர்களோடு இன்னும் தனது மாம்ச சரீரத்தில் தான் இருந்தார் என்பதை நாம் அறிவோம். அந்த அப்பம் தமது சரீரத்தைக் குறிப்பிடுகிறது என்றே அவர் தெளிவாக குறிப்பிடுகிறார்.

அதுபோல, அக்கினிக் கடலானது மரணத்தைக் குறிக்கிறது – ஜீவனைக் குறிக்கவில்லை. அது இரண்டாம் மரணம் ஆகும். இந்த மரணமானது எந்த அர்த்தத்திலும் ஜீவனைக் குறிக்காது. மரணம் என்பது ஜீவனுக்கு எதிர்மறையானது – அதாவது முடிவு, ஜீவன் அற்று போகுதல் – முற்றிலுமான நிரந்தர நித்திய அழிவு ஆகும். ஜீவனும் மற்றும் ஜீவன் அற்று போகுதலாகிய மரணமும் வேதாகமத்தில் அநேக இடங்களில் அவை எதிர்மறையானவை என்று தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது. இவை இரண்டும் ஒன்றுக்கொன்று எதிரிடையானவை. வேத வாக்கியங்கள் இதனை எவ்வாறு தெளிவாகக் காண்பிக்கிறது என்று கவனியுங்கள்:"**இதோ, ஜீவனையும் நன்மையையும் மரணத்தையும் தீமையையும் இன்று உனக்கு முன்னே வைத்தேன்**" (உபா. 30 : 15, 19). "**பாவத்தின் சம்பளம் மரணம்: தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்**" (ரோம. 6 : 23; 5 : 21). "**மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள்: ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள்**" (ரோம. 8 : 13; கலா. 6 : 8). "**இவர்கள் நித்திய ஆக்கினையை** [Kolasin, கொலோசின் என்றால் அழிவு (cutting off) நித்திய அழிவை] **அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள் என்றார்.**" (மத். 25 : 46).

## அக்கினி என்பது – தீவிரமாக தணியாத தாகத்தோடு தேவனை தேடுதல் அல்ல

"அக்கினி என்பது தணிக்கவே முடியாத தேவனைக் குறித்த தேடல்" என்ற பில்லி கிரகாமின் எண்ணமானது முற்றிலுமாக வேதாகம போதனைகளுக்கு இசைவாக இல்லை என்பது தெளிவாகிறது. ஏனெனில் "**அக்கினிக்கடல் ..... என்பது இரண்டாம் மரணம்**" என்று வேதாகமம் கூறுகிறது. (வெளி. 20 : 15; 21 : 8). மேலும் வேதாகமமானது (சங். 146 : 4-ஐ 6 : 5; 115 : 17; யோபு 14 : 21-யோடு ஒத்துபார்க்கவும்). "**அவனுடைய ஆவி பிரியும், அவன் தன் மண்ணுக்கு திரும்புவான்: அந்நாட்களிலே அவன் யோசனைகள் அழிந்துபோம்**" என்று கூறுகிறது. வேதாகமத்தின் நரகத்தில் "தேவனைக் குறித்ததான தேடல்" இருக்க முடியாது. சாத்தானுடைய ஆதி மகா பொய்யாகிய "**நீங்கள் சாகவே சாவதில்லை**" (ஆதி. 3 : 4; யோவா. 8 : 44) என்பதை நாம் நம்பினால் மாத்திரமே, இரண்டாம் மரணமானது மரணம் இல்லை என்றும், வாதிப்புடன் கூடிய ஜீவிதம் என்று நம்புகிறவர்களாயிருப்போம்.

## மரணம் என்பது தேவனிடமிருந்து வெறுமனே பிரிதல் என்று அர்த்தமல்ல

இரண்டாம் மரணமானது தேவனிடமிருந்து நித்தியமாக பிரித்துவைக்கப்படுவது தான் என சிலர் சொல்லலாம். இது விழுந்துபோன மனுஷருடைய எண்ணமாயும், சாத்தானுடைய வியாக்கியானமுமாகவும் இருக்கிறது. ஏற்கெனவே காண்பித்தது போல, வேதாகமத்தில் இவ்வாறாக சொல்லப்படவில்லை என அறிவுறுத்துகிறது. ஏனெனில் (1) நித்திய ஜீவனில் சந்தோஷம் என்பதற்குரிய எதிர்பதமே (2) தேவனிடமிருந்து நித்தியமாக பிரிவு என்பதாகும்.

ஆனால் நித்திய ஜீவனுக்கான எதிர்பதம் நித்திய மரணமே ஆகும். இரண்டாம் மரணமாகிய கெஹென்னாவானது தேவனிடமிருந்து வெறுமனே நித்தியமான பிரிவு மட்டுமல்ல, இதைவிட சற்று அதிகமான அர்த்தத்தை உடையது - அதாவது உயிர்த்தெழுதலில் எழுப்பப்படும்படிக்கு வாக்களிக்கப்பட்டிருக்கிற முதலாம் மரணத்தை அதாவது ஆதாமினால் ஏற்பட்ட மரணத்தைக் (எபி. 10 : 28) காட்டிலும், (இரண்டாம் மரணமானது) முற்றிலுமான, நிரந்தரமான, நித்திய அழிவாகும்; இது ஓர் "**கொடிதான தண்டனை**" (எபி. 10 : 29) ஆகும்.

## சாத்தான் அழிக்கப்படுவான்

அக்கினிக் கடலாகிய இரண்டாம் மரணம் என்றால் நித்திய அழிவு என்பதாகும். இவ்வாறாக சொல்வதற்கு அநேக காரணங்களில் ஒன்று என்னவென்றால், அக்கினிக் கடலில் தள்ளப்படவிருக்கும் சாத்தானானவன் முடிவாக முற்றிலுமாக அழிக்கப்படுவான் (நிர்மூலமாக்கப்படுவான்) என வேத வாக்கியங்கள் காண்பிக்கின்றன. "**மரணத்திற்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கு**" இயேசு மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார் என எபி. 2 : 14 தெளிவாகக் குறிப்பிடு கிறது. நம்முடைய ஆண்டவராகிய இயேசு தம்முடைய இரண்டாம் வருகையில் சாத்தானை ஒடுக்கி, அவனை ஆயிர வருஷமளவும் கட்டி வைப்பார். (வெளி. 20 : 1, 2). யாருக்கெல்லாம் நித்திய ஜீவன் கொடுக்கப்படவேண்டும் என்று பூமியில் மனுக்குலத்தை பரீட்சிக்கும்படியாக, பின்னர் அவன் கொஞ்ச காலம் (a little season) விடுதலையாக்கப் படுவான் (வச. 3, 7, 8).பரீட்சைகள் முடிந்த பின்னர், சாத்தானும் அவனை சார்ந்த தூதர்களும் அழிக்கப் படுவார்கள். இவ்வாறாக அழிக்கப்படுவதை (நிர்மூலமாக்கப் படுவதை) இரண்டாம் மரணமாகிய அக்கினிக் கடலிலே, - அதாவது நித்திய அக்கினியிலே (மத். 25 : 41) போடப் படுவார்கள் என அடையாளப்படுத்தி கூறப்பட்டிருக்கிறது. சிலர் தவறாக எண்ணுவது போல துன்மார்க்கர் சொல்லர்த்த மான அக்கினியில் நித்தியமாக வாதிக்கப்படவோ அல்லது அவர்கள் நித்தியத்திற்கும் உயிருடனோ வைக்கப்பட மாட்டார்கள்.

எபி. 2 : 14-ல் 'கட்டார்ஜீயோ' (Katargeo) என்ற கிரேக்க வார்த்தையானது "அவர் அழிக்கும்படி" (ஆங் கிலத்தில் - he might destroy) என மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது. இந்த வார்த்தையானது அவனை "சக்தி யில்லாதவனாக ஆக்க" என்று மொழிப்பெயர்க்கப் படுவதற்கு ஒருவிதத்தில் கருத்தை கொடுத்தாலும், அவ்வாறாக மொழிபெயர்த்தாலும் அதின் அர்த்தத்தை குறைவுப்படுத்த மாட்டாது. சாத்தானுடைய ஜீவனை எடுப்பதென்பது அவனை நிச்சயமாக அதிகாரமில்லாமல் சக்தியில்லாமல் ஆக்கிவிடும். ஆதலால் அவன் ஜீவனை நீக்குவதே எந்த வழியையும் விட மிக சிறந்த வழியாகும். ஒருவேளை அவனுடைய சுதந்திரத்தை மட்டுமே கட்டுப் படுத்தியிருந்தால், அவனுக்கு இன்னும் தனது சித்தத்தின்படி செயல்படவும், மேலும் தன்னுடைய மற்ற அதிகாரங்களால் தேவனுக்கும் நீதிக்கும் விரோதமாக செயல்படவும் அதிகாரம் இருக்கும். ஆகையால், அவனை முழுமையாகவும் முழுவது மாகவும் வல்லமையில்லாமல் ஆக்குவதென்பது அவனை முடிவாக, நித்தியமாக அழிப்பதுதான்.

புதிய ஏற்பாட்டில் கட்டார்ஜீயோ (Katargeo) என்ற கிரேக்க வார்த்தையானது கீழ்க்கண்ட மொழிபெயர்ப்புகளில் 'முற்றிலுமான அழிவு' என்ற கருத்தை தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறது. "**தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோம்** [முடிவடையும்] **...... அறிவானாலும் ஒழிந்துபோம்** [இல்லாமற் போகும்]" 1 கொரி. 13 : 8. "**நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோம்**" 1 கொரி. 13 : 10. "**அப்பொழுது அவர் சகல துரைத்தனத்தையும் சகல அதிகாரத்தையும் வல்லமையையும் பரிகரித்து** [அழித்து] ..... (1 கொரி. 15 : 24). "**பரிகரிக்கப்படும்** [அழிக்கப்படும்] **கடைசிச் சத்துரு மரணம்**" 1 கொரி. 15 : 26. "**மரணத்துக்கேதுவான ஊழியம் ............ ஒழிந்துபோகிற மகிமையுடைய அந்த ஊழியம் ....**" 2 கொரி. 3 : 7, 8. "**தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து ......**" எபே. 2 : 15. "**அந்த அக்கிரமக்காரன் வெளிப்படுவான்: அவனைக் கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தாலே அழித்து, தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே நாசம் பண்ணுவார்.**" 2 தெச. 2 : 7, 8.

மிக கவனமாக ஆராய்ந்து பார்த்தால், மேலே சொல்லப்பட்ட அனைத்து வசனங்களும் எபி. 2 : 14-க்கு சற்றும் குறைவில்லாமல், காட்டார்ஜீயோ என்பது நிர்மூல மாக்கப்படுதல் அல்லது ஜீவனினின்று நீக்கப்படுதல் என்ற கருத்தில் அழிவு என்று பொருள்படும். அந்திக் கிறிஸ்து வையும் ஆதாமினால் உண்டான மரணத்தையும் அழிப்பது சம்பந்தமாக, இது எவ்வாறாக பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை முக்கியமாகக் கவனியுங்கள். சாத்தானும் மீத முள்ள திருத்தமுடியாத துணிகரமான துன்மார்க்கர் யாவரும் தேவனால் முடிவாக அழிக்கப்பட்டு நிர்மூலமாக்கப் படுவார்கள். "**துன்மார்க்கர் யாவரையும் அழிப்பார்.**" (சங். 145 : 20). "**அக்கிரமக்காரர் ஏகமாய் அழிக்கப்படுவார்கள்: அறுப்புண்டு போவதே துன்மார்க்கரின் முடிவு**" (சங். 37 : 38).


தீரு இராஜாவைக் குறித்த சித்தரிப்பில் எசே. 28-ஆம் அதிகாரத்தில் சாத்தானைப் பற்றி சொல்லப் பட்டிருக்கிறது. இந்த அதிகாரமானது அவன் ஆதியில் பூரணமாயிருந்ததையும், அவனில் அநியாயம் கண்டுபிடிக் கப்படுவதற்கு முன்பதாக அவன் ஏதேனில் "**காப்பாற்று கிறதற்காக அபிஷேகம் பண்ணப்பட்ட கேருப்**"-பாக இருந்தான் என்பதையும் விவரிக்கிறது. (வச. 12-15). அவன் முடிவாக அழிக்கப்படுவான் என்பதை "**இனி** [நீ] **ஒருபோதும் இருக்கமாட்டாய்**" என்று வசனங்களில் (வச. 19) காண்பிக்கப் பட்டுள்ளது. இராஜாவிற்கென தோப்பேத் (இன்னோம் பள்ளத்தாக்கு அல்லது கெஹென்னா) ஆயத்தம் பண்ணப் பட்டிருக்கிறது என தீர்க்கதரிசனமாக கூறப்பட்டிருப்பதில் சாத்தானை இராஜா என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகையால் அவன் முற்றிலுமாக நித்தியமாக அழிக்கப்படுவான் என்பதை காட்டுகிறது. அவன் விடுவிக்கப்படக் கூடாதபடிக்கு அவை ஆழமும் விசாலமுமாக்கப்பட்டிருக்கிறது என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அழிவை ஏற்படுத்தும் அதின் தன்மையானது அதன் அக்கினி மற்றும் மிகுந்த விறகுகள்

என்ற பதங்களால் குறிப்பிடப்பட்டுள்ளது. அதின் அழியும் விதமானது, "**கர்த்தரின் சுவாசம் கந்தகத் தீயைப் போல அதைக் கொளுத்தும்**" எனவும் விளக்கப்பட்டிருக்கிறது. (ஏசா. 30 : 33).

## துன்மார்க்கமான மனிதர்களுக்கும் அழிவு உண்டு

அக்கினிக்கடலாகிய இரண்டாம் மரணத்தில் துன்மார்க்கமான மனுஷர்களும் நித்திய அழிவை அடைகிறார்கள் என வெளி. 20 : 15 காட்டுகிறது. "**ஜீவ புஸ்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக் கடலிலே தள்ளப்பட்டான்.**" மற்றும், அநேக வேத வாக்கியங்களில் துன்மார்க்கமான மனுஷர்கள் முடிவில் முற்றிலுமாக அழிக்கப்படுவார்கள் (அறுப்புண்டு போவார்கள்) என தெளிவாகக் காண்பிக்கப்பட்டிருக்கிறது.

மனுஷருடைய ஆத்துமாவானது அழியாது என பிளாட்டோ (Plato) என்பவர் போதித்திருக்கிறார். சுவிசேஷ (சபை) யுகத்தின் ஆரம்பக்கட்டத்தில் இவருடைய போதனையானது பெயரளவான கிறிஸ்தவர்களுடைய நம்பிக்கைகளில் சேர்க்கப்பட்டது. இது வேதாகம போதனைகளுக்கு எதிரிடையாக இருக்கிறது. மனுஷருடைய ஆத்துமாவானது அழிந்து போகும் என்றும் மரணமடையும் என்றும் வேதாகமம் காண்பிக்கிறது. (யோபு 36 : 14 மார்ஜின் பார்க்கவும்; சங். 22 : 29; 30 : 3; 33 : 18, 19; 49 : 8; 56 : 13; 78 : 50; 116 : 8; ஏசா. 53 : 10, 12; 55 : 3; எசே. 13 : 19; 18 : 4, 20, 27; மத். 26 : 38; யாக். 5 : 20). வேதாகமத்தில் அடையாளமாக அல்லாமல் நேரடியான போதனைகளிலும்கூட துன்மார்க்கர் அழிக்கப்படுவார்களென்றும், ஆத்துமாவும் சரீரமும் அழிந்துபோகும் என்றும் காண்பிக்கப்பட்டிருக்கிறது. (யோபு 31 : 3; சங். 9 : 5, 6; 35 : 17; 145 : 20; நீதி. 6 : 32; ஏசா. 1 : 28; அப். 3 : 23; மத். 10 : 28; 1 கொரி. 3 : 17; 2 தெச. 1 : 9; 1 தீமோ. 6 : 9; 2 பேது. 2 : 12-ஐ வாசிக்கவும்).



சாத்தானின் ஆதிப் பொய் – "அப்பொழுது சர்ப்பம் (சாத்தான்) ஸ்திரீயை நோக்கி: நீங்கள் சாகவே சாவதில்லை என்றது." ஆதி. 3 : 4.

துன்மார்க்கர்கள் நிர்மூலமாகிறார்கள் என அநேக நேரடியான வேத வாக்கியங்கள் நமக்கு காண்பிக்கின்றன. உதாரணமாக, யோபு 4 : 9: "**தேவனுடைய சுவாசத்தினாலே அவர்கள் அழிந்து, அவருடைய நாசியின் காற்றினாலே நிர்மூலமாகிறார்கள்**"; சங். 104 : 35: "**பாவிகள் பூமியிலிருந்து நிர்மூலமாகி, துன்மார்க்கர் இனி இராமற்போவார்கள்.**" நிர்மூலமாக்கப்படுதலில் ஆத்துமாவும் உள்ளடங்கும் (ஏசா. 10 : 18). இரையாவார்கள் (devour) என்ற பதமும் மற்ற இடங்களில் உபயோகிக்கப்பட்டிருக்கிறது (ஏசா. 1 : 20; எபி. 10 : 26-28). இரையாவார்கள் என்பதில் ஆத்துமாக்களும் உள்ளடங்கும் (எசே. 22 : 25). மேலும், மனுஷர்கள் சங்காரமாவார்கள் (அழிந்து போவார்கள் - perish) என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது (யோபு 6 : 15, 18; சங். 49 : 12; 73 : 27; நீதி. 11 : 10; 28 : 28). இதில் ஆத்துமாக்களும் உள்ளடங்கும் (மத். 16 : 25, 26 - இங்கே ஆத்துமா என்பதற்குரிய கிரேக்க வார்த்தையானது ஜீவன் என்று இந்த இடத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது). சங்காரமாவார்கள் என்ற அர்த்தத்தை யாராவது திசைதிருப்ப முயன்றால், வேதவாக்கியங்கள் அதின் துல்லியமான அர்த்தத்தை கீழ்கண்டவாறு மிகவும் தெளிவாகக் குறிப்பிடுகிறது - சங். 37 : 20; மத். 8 : 25, 32; லூக். 11 : 50, 51; 13 : 33; யோவா. 3 : 16-ஐ பார்க்கவும். பொல்லாதவர்கள் அறுப்புண்டு போவார்கள் : சங். 37 : 9, 22, 34, 38. இதிலும் ஆத்துமா உள்ளடங்கியதே. (லேவி. 22 : 3; எண். 15 : 30). ஆகையால் நித்தியமான அழிவிற்குள் போகிறார்கள். அதாவது இல்லாமல் போகிறார்கள் (யோபு 6 : 15-18; சங். 37 : 10, 36). மேலே சொல்லப்பட்ட அநேக வசனங்கள் யாவும் சிந்திக்கிற பாரபட்சமற்ற வாசகர்களை நிச்சயமாக திருப்திப் படுத்தும். ஏனெனில், வேதாகமத்தின் சொல்லர்த்தமான வசனங்களானது பொல்லாதவர்களுடைய அழிவைக் குறித்து மிக தெளிவாக போதிக்கிறது.

## மரணமும் ஹேடீஸ்-ம் அழிக்கப்பட இருக்கிறது

வெளி. 20 : 14-லானது, மரணமும் ஹேடீஸ்-ம் அக்கினிக் கடலிலே தள்ளப்படுமென்றும், அவை முடிவாக முற்றிலுமாக அழிக்கப்படும் என்றும் வேறு எங்கும் இல்லாத அளவிற்கு மிக தெளிவாக வேத வாக்கியங்கள் கூறுகிறதினால், அக்கினிக் கடலாகிய இரண்டாம் மரணமானது நித்திய அழிவைக் குறிக்கிறது என்பதற்கு இது முக்கிய ஆதாரமாக இருக்கிறது. ஓசியா 13 : 14 சொல்லுவதென்னவெனில், "**அவர்களை நான் பாதாளத்தின் வல்லமைக்கு நீங்கலாக்கி விடுவிப்பேன்: மரணமே** [ஆதாமினால் உண்டான மரிக்கிற நிலைமை] **உன் வாதைகள் எங்கே? பாதாளமே** [ஷியோல்; ஓசியா 13 : 14-ல் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிற 'ஹேடீஸ்' என்பது ஆதாமின் மரண நிலையாகிய முதலாம் நரகத்தை குறிக்கிறது] **உன் சங்காரம் எங்கே?**" ஆதாமின் மரண நிலையிலிருந்து மரித்தோர் அனைவரும் எழுப்பப்பட்ட பின்பு, பாதாளமானது (முதலாம் நரகமானது) படிப்படியாக அழிக்கப்படும். அதன் பின்பு ஆயிர வருஷ முடிவில் அவர்கள் முழுமையான பூரணத்தை அடைவார்கள். கொஞ்ச காலத்திற்குள் (Little season) நுழைந்தபின் ஆதாமினால் உண்டான மரிக்கிற நிலையானது இனி ஒருபொழுதும் இராது. இதை குறித்து தான் 1 கொரி. 15 : 26 தெளிவாக கூறுகிறது. "**பரிகரிக்கப்படும் கடைசி சத்துரு மரணம்.**" வெளி. 21 : 4-லானது: "**அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்: இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை: முந்தினவைகள் ஒழிந்து போயின**" என்று கூறுவதை கவனியுங்கள். மேலும் வெளி. 22 : 3: "**இனி ஒரு சாபமுமிராது**" [ஆதாமினால் உண்டான பாவத்தினாலும், மரணத்தினாலும், செத்துக் கொண்டே இருக்கும் நிலை ஆகியவற்றினாலும் இனி ஒரு சாபமும் இராது] என்று கூறுகிறது.

# மிருகமும் கள்ளத்தீர்க்கதரிசியும் அழிக்கப்படுவார்கள்

வெளி. 19 : 20 மற்றும் 20 : 10–ஆகிய வசனங்கள், மிருகமும் (பெரிய அந்திக்கிறிஸ்து) கள்ள தீர்க்கதரிசியும் (சிறிய அந்திக்கிறிஸ்து அமைப்பும்) அக்கினிக் கடலிலே தள்ளப்படுவார்கள் என்றும், அவை முற்றிலுமாக அழிக்கப் படுமென்றும் வேறு எங்கும் இல்லாத அளவிற்கு மிக தெளிவாக வேதாகமம் கூறுகிறதினால், அக்கினி கடலாகிய இரண்டாம் மரணமானது நித்திய அழிவைக் குறிக்கிறது என்பதற்கு இது மேலும் வலுவான ஆதாரமாக இருக்கிறது. 2 தெச. 2 : 3-7–வசனங்கள் அந்திக்கிறிஸ்துவை "**பாவ மனுஷன்**" என்றும் "**கேட்டின்** [அழிவின்] **மகன்**" என்றும் "**அக்கிரமத்தின் இரகசியம்**" என்றும் குறிப்பிடுகின்றன. "**அந்த அக்கிரமக்காரன் வெளிப்படுவான்: அவனை கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழித்து** [கட்டார்ஜீயோ; நிக்கிரகம் பண்ணி], **தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே நாசம் பண்ணுவார்**" என்று வசனம் 8 கூறுகிறது. இது நிறைவேறக் கூடிய காலத்தையும், பூமியில் தேவனுடைய இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதையும் நாம் எதிர்நோக்கி இருக்கிறோம். அந்திக்கிறிஸ்துவையும் கள்ளத்தீர்க்கதரிசியையும் எப்படி அடையாளம் கண்டு கொள்வது? என்பதையும், இவர்க ளுடைய எழுச்சியையும், ஆளுகையின் காலத்தையும், அழிவையும் அறிந்து கொள்ள வேண்டுமானால் S. Vol -2 'காலம் சமீபமாயிருக்கிறது' – அத்தியாயம் 9–ஐயும், BS 338–ஐயும் வாசியுங்கள்.

சாத்தானும், திருந்தாத பாவிகளும், மரணமும், நரகமும், மிருகமும் மற்றும் கள்ளத்தீர்க்கதரிசி ஆகிய ஆறும் அழிக்கப்படும் என்று வேதாகமத்தின் நேரடியான வசனங்கள் மிக தெளிவாகப் போதிக்கின்றன. அதாவது, இவை அனைத்தும் அக்கினிக் கடலிலே தள்ளப்படும் என்று கூறப்பட்டிருக்கிறது. (வெளி. 20 : 10-15). அதன் பிரகாரமாக, இரண்டாம் மரணமாகிய அக்கினிக் கடலானது, ஜனங்கள் நித்தியமாக உயிருடன் வாதிக்கப்படும்படியான ஓர் இடத்தையோ அல்லது ஓர் நிலையையோ குறிப்பிடவில்லை, மாறாக, அது நித்திய அழிவைக் குறிக்கிறது என்பதைக் காட்டுகிறது.

# வெளி. 20 : 10–ல் நித்திய வேதனை இல்லை

அக்கினிக் கடலில் சிலர் தள்ளப்பட்டு, அங்கே "**சதாகாலமும் வாதிக்கப்படுவார்கள்**" என்று வெளி. 20 : 10–ல் என்று சொல்லப்பட்டிருப்பதைக் குறித்து இது என்ன? என்று சிலர் கேட்கலாம். இந்த வசனங்களை கவனமாக ஆராய்ந்து பார்த்தால், 'வாதிக்கப்படுவார்கள்' என்று இங்கு மொழிப் பெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வினைசொல்லாகிய 'பாசானிசோ' (basanizo)–வானது முதல் அர்த்தத்தின்படி பரீட்சித்தல் (to test), சோதித்தல் (to examine) என பொருள்படும்; இரண்டாவது அர்த்தத்தின்படி துன்புறுத்தி பரீட்சித்தல் (to test by torture), துன்புறுத்தி சோதித்தல் (to examine by torture) என பொருள்படும். இந்த இரண்டாவது அர்த்தமாகிய துன்புறுத்தி பரீட்சித்தல், சோதித்தல் என்பது பண்டைய கால வழக்கத்தின்படி துன்புறுத்துதலின் மூலமாக நபரை பரீட்சிப்பதினால் இந்த அர்த்தம் உருவானது. உதாரணமாக, பரி. பவுலைச் சோதிக்க சவுக்கால் அடித்து விசாரிக்கும்படியாக சேனாதிபதி சிலருக்கு கட்டளை யிட்டதைக் கவனியுங்கள் (அப். 22 : 24). மூன்றாவது அர்த்தத்தின்படி துன்புறுத்துதல், வாதித்தல் என்று பொருள் படும். இதற்கு இவ்வாறாக மூன்று அர்த்தங்கள் உள்ளன என்பதை அனைத்து கிரேக்க வல்லுனர்களும் ஒப்புகொள் கிறார்கள். லிட்டெல் மற்றும் ஸ்காட் எழுதிய கிளாசிக்கல் என்ற புத்தகத்தையும் தாயர் என்பவர் எழுதிய இந்த வார்த்தையின் வேதாகம உபயோகத்தையும் முக்கியமாக வாசிக்கவும். பொதுவாக, இந்த வார்த்தையானது முதலில் பரீட்சித்தல் என்றே அர்த்தப்படுத்தும். ஏனெனில் 'பாசானோஸ்' (basanos) என்ற பெயர்ச்சொல்லில் இருந்து 'பாசானிசோ' (basanizo) என்ற வினைச்சொல் உருவானது. அதின் அடிப்படையான அர்த்தம் 'உறைகல்' என்பதாகும். இந்த உறை கல்லானது பல்வேறு உலோகங்களை சோதித்துப் பார்க்க உபயோகிக்கப்படுகிற ஒன்றாகும். ஆனால் பண்டைய கால முறைகளின்படி, அநேக பரீட்சைகளானது சவுக்கடியின் மூலம் இருந்ததால் இந்த வார்த்தையானது 'வாதிப்பதின் மூலமாக பரீட்சித்தல்' என அர்த்தம் கொள்ளப் பட்டது. இறுதியில், வாதித்தல் என்பது மட்டுமே அதின் அர்த்தமாக மாறிவிட்டது.

சந்தேகமில்லாமல், மொழிப்பெயர்ப்பு செய்தவர் களுடைய மனங்களில் நித்திய வேதனை என்ற போதனை நிறைந்திருந்ததால், அவர்கள் இது சம்பந்தமாக மூன்றாவ தான அர்த்தத்தை எடுத்துக்கொண்டார்கள். ஆனால் நாம் முதலாவதான அர்த்தத்தை எடுத்தோமானால் இந்த காரியம் நமக்கு தெளிவாகிவிடும். மேலும் மேலே குறிப்பிட் டுள்ள இந்த பாடம் சம்பந்தமாக, இவை சொல்லர்த்தமான வாக்கியங்களோடும் இசைந்திருக்கிறதை காணலாம். "***அவர்கள் இரவும் பகலும் சதாகாலங்களிலும்*** *பரீட்சிக்கப் படுவார்கள்.*" பரலோகத்திலும் பூமியிலும் நித்திய ஜீவனைப் பெற பாத்திரவான்களாகும் பூரண மனங்களுடைய தேவனுடைய சிருஷ்டிகளானவர்கள், பின்னர் முடிவாக, பிசாசினுடைய வரலாற்றையும், மிருகத்தைப் பற்றியும், கள்ளத் தீர்க்கதரிசியைப் பற்றியும், இவர்களுடைய அமைப்புகளைப் பற்றியும், இவர்களுடைய தன்மையை யும், குணத்தையும், கனிகளையும் குறித்து பரீட்சித்து சோதிப்பார்கள். எப்பொழுதெல்லாம் அவர்களைக் குறித்து பரீட்சித்து சோதிக்கிறார்களோ அப்பொழுதெல்லாம் இந்த மூன்றையும் அதாவது பிசாசையும், மிருகத்தையும், கள்ளத் தீர்க்கதரிசியையும் பொருத்தமான இடமாகிய அடையாள மான அக்கினியும் கந்தகமுமான கடலிலே, அதாவது முடிவான முற்றிலுமான நித்திய அழிவின் இடத்திலே பொருத்தமாக தேவன் வைத்திருக்கிறார் என்பதை தங்களுடைய பரீட்சித்தலின் வாயிலாக இந்த உண்மை நிலையை உணருவார்கள்.

**துன்மார்க்கனுக்கு அநேக வேதனைகளுண்டு; கர்த்தரை நம்பியிருக்கிறவனையோ கிருபை சூழ்ந்துகொள்ளும். சங். 32 : 10.**

# ஏசாயா 14 மற்றும் 66 ஆம் அதிகாரங்களில் காட்டப்பட்டுள்ளபடி பரிசோதனை

சாத்தான், மிருகம், கள்ள தீர்க்கதரிசி பற்றியும் அவர்களுடைய அமைப்பு ஆகியவற்றின் முடிவைப் பற்றியும் அவைகளின் கிரியைகளைப் பற்றியும் பரலோகத்திலும் பூமியிலும் இரட்சிக்கப்பட்டவர்கள் இவர்களுடைய செயல்களை சோதித்து ஆராய்கிறதை ஒரு வரைப்படமாக ஏசாயா 14 : 12-27-வரையுள்ள வசனங்களில் விவரிக்கப்பட்டிருப்பதை நாம் காண்கிறோம். வச. 12-14-ல் ஒரு மனிதன் என்று அடையாளப்படுத்தப்பட்டிருப்பதில், இவர்களுடைய கூட்டுறவின் அடிப்படையில், முதலாவது பிசாசையும், பின்னர் மிருகத்தையும் முடிவாக கள்ளத் தீர்க்கதரிசியையும் குறிக்கிறது. இதில் இவர்களுடைய சுயத்தை உயர்த்துகிற துன்மார்க்க கிரியைகள் விவரிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் நித்திய அழிவிற்குள், அதாவது இரண்டாம் நரகத்திற்குள் (second hell) கொண்டுவரப்படுகிறதை வசனம் 15 கூறுகிறது. பரலோகத்திலும் பூமியிலும் இரட்சிக்கப்பட்டவர்கள் தங்களுடைய பூரணமாக்கப்பட்ட மனதினாலும் இருதயத்தினாலும் இந்த மூன்றையும், அவர்களுடைய நோக்கங்களையும், குணநலன்களையும், செல்வாக்குகளையும், வரலாறுகளையும், கிரியைகளையும், விளைவுகளையும் என்றென்றைக்கும் கவனமாக இவர்களைப் படித்து, ஓர் உலோகத்தை உறைகல்லனால் பரிசோதிப்பதுபோல பரீட்சிப்பார்கள். "**உன்னை காண்கிறவர்கள் உன்னை உற்றுபார்த்து, உன்னைக் குறித்து சிந்திப்பார்கள்.**" இவ்விதமாக 16-20 வரையுள்ள வசனங்கள் குறிப்பிடுகின்றன. ஒப்பிட்டுப்பார்த்தால், இந்த மூன்றைப் பற்றிய பல்வேறு காரியங்களின் உண்மையான இரகசியங்களில் நாம் இப்போது மிக சொற்பமான அளவை மட்டுமே அறிந்திருக்கிறோம். ஆனால் வரவிருக்கிற யுகங்களில் இவைகளுடைய விருப்பங்கள், எண்ணங்கள், நோக்கங்கள், வார்த்தைகள் மற்றும் செயல்கள் ஒவ்வொன்றும் விரிவாக வெளியரங்கமாக்கப்படும். (1 கொரி. 4 : 5). பரலோகத்திலும் பூமியிலும் இரட்சிக்கப்பட்டவர்கள் இவர்களைக் குறித்து நித்தியமாக பரீட்சித்து, சோதித்து ஆராய்வார்கள் என வெளி. 20 : 10 விவரிக்கிறது. அவர்கள் "வாதிக்கப்படுவார்கள்" என்று தவறாக மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தையினுள் மேலே சொல்லப்பட்ட உண்மையான அர்த்தம் புதைந்திருக்கிறது. 21-27 வசனங்கள், இவர்கள் அடையாளமான அக்கினிக் கடலிலே தள்ளப்படுவார்கள் என விவரிக்கிறது.

சாத்தானோடும் அவனுடைய தூதர்களோடும் (மத். 25 : 41) இரண்டாம் மரணத்தில் நிக்கிரகம் பண்ணப்பட்டு, அறுப்புண்டு, அழிந்து போகிற துன்மார்க்கமான மனுஷர்களுடைய நோக்கங்களையும், குணங்களையும், செயல்பாடுகளையும், வரலாறுகளையும், கிரியைகளையும் மற்றும் விளைவுகளையும் அதே போன்ற ஓர் ஆய்வை (இரட்சிக்கப்பட்டவர்கள்) "**கொஞ்ச காலம்**" (Little season) முடிவடைந்த பின்னர் செய்வார்கள். "**கொஞ்ச காலத்திற்கு**" பின்பாக "**புதிய வானமும், புதிய பூமியும்**" (2 பேது. 3 : 13) ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் இவ்வாறு நடந்தேறும் என ஏசா. 66 : 22-24 காட்டுகிறது. "**இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சத்தில்**" (கலா. 1 : 4) ஜனங்களால் பெரிதும் போற்றப்பட்ட நபர்களையும், மற்றவர்களையும், துன்மார்க்கமான அதிபதிகளையும் அப்பொழுது பூரணமாக்கப்பட்ட மனுக்குலமானது உரிய ஆய்வை மேற்கொள்ளுவார்கள். தேவனுக்கு விரோதமாக தொடர்ந்தேர்ச்சியாக எதிர்த்து, மனப்பூர்வமாய் மீறுபவர்கள் கெஹென்னா என்றும் அக்கினிக்கடல் என்றும் அடையாளமாய் சொல்லப்பட்டிருக்கிற இரண்டாம் மரணத்தில் முழுவதுமாக, நித்தியமாக அழிக்கப்படுவார்கள். அக்கினிக் கடல், கெஹென்னா மற்றும் அதின் பிரேதங்கள் (உயிருள்ள ஜனங்களை அல்ல), மற்றும் புழுக்களும் அக்கினியும் அதின் அழிக்கும் வேலையை முடிக்கும் வரை ஓயாது என ஆகிய இவைகளின்மூலம் இரண்டாம் மரணத்தைக் குறித்து சித்தரிக்கப்பட்டிருக்கிறது. துன்மார்க்கமான மனுஷர்கள் "**மாம்சமான யாவருக்கும் அரோசிகமாயிருப்பார்கள்.**" 18-ஆம் நூற்றாண்டின் பிரசங்கியாரான ஜோனத்தான் எட்வர்ட்ஸ் என்பவர் ஏசா. 66 : 20-ஐ அடிப்படையாகக் கொண்டு வெளிப்படையாய் சொன்னது என்னவெனில்: "பிற்காலத்தில் நாம் பரலோக நிலையில் இருந்தவாறு நம்முடைய தாய் தகப்பன்மார்கள் அக்கினியில் நித்திய வேதனையில் அவதிப்படுகிறதைக் காணும்போது, தேவனுடைய நீதியினிமித்தம் அவரை துதித்து நம்முடைய கைகளைத் தட்டுவோம்" என்கிறார். ஜோனத்தான் எட்வர்ட்ஸ்க்கு நல்ல இருதயம்தான் இருக்கிறது, ஆனால் புறஜாதியினுடைய மோசமான கோட்பாடுகளும், தவறான மத நம்பிக்கைகளும் அவருடைய சிந்திக்கும் திறனை மூடிவிட்டது என நாங்கள் கருதுகிறோம்.

# வெளி. 14 : 10-ல் நித்திய வேதனை கொள்கை இல்லை

வெளி. 14 : 8-ஆம் வசனம் (18 : 2-4-வசனங்களுடன் ஒத்துப்பார்க்கவும்) பெயரளவான கிறிஸ்தவ மார்க்கத்தின் பொய்யான மத அமைப்பாகிய பாபிலோனின் வீழ்ச்சியைக் குறிப்பிடுகிறது. அந்திக்கிறிஸ்துவின் முத்திரையை தரித்துக் கொள்வதைப் பற்றி வசனம் 9 கூறுகிறது. (அந்திக்கிறிஸ்துவின் முத்திரை என்றால் என்ன? என்பதைப் பற்றி அறிய BS 551 வாசியுங்கள்). மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் வணங்குகிறவர்கள் எவர்களோ அவர்களே அவைகளுக்கு கீழ்ப்பட்டவர்களும் அவைகளுக்கு ஊழியஞ் செய்கிறவர்களுமாவர். நெற்றிகளிலும் கைகளிலும் அடையாளத்தைப் பெற்றிருத்தல் என்பது மிருகம் மற்றும் சொரூபத்தின் போதனைகளை அங்கீகரிப்பதையும் அதனைச் சேவிப்பதையும் குறிக்கிறது. மகா உபத்திரவத்தின்போது பாபிலோன் அழிக்கப்படுகையில், தேவனுடைய கோபம் இன்னதென்று அப்படிப்பட்டவர்கள் அனைவரும் அறிந்து கொள்வார்கள்; ஏனெனில் அவர்கள் யாவரும் வற்புறுத்தப்பட்டு இத்தகைய அனுபவங்களைப் பெறும்படிக்கு உட்படுத்தப்படுவார்கள். தேசங்களுக்காக அவர் வைத்திருக்கிற பாத்திரமானது, அவர்களோடுள்ள தம்முடைய அதிருப்தியின் (வெறுப்பின்) காரணமாக அது அவருடைய

கோபாக்கினையின் பாத்திரமாயிருக்கிறது. (எரே. 25 : 26-38-யுடன் ஒத்துபார்க்கவும்). அவர்கள் "**ஆட்டுக்குட்டியான வருக்கு முன்பாக ..... அக்கினியினாலும், கந்தகத்தினாலும் வாதிக்கப்படுவார்கள்**" [பாசானிசோ (basanizo), சோதிக்கப் படுதல், உறை கல்லில் உறாயப்படுதல்]. அதாவது, இத்தகைய அமைப்புகளிடம் இருதயப்பூர்வமாகவும், ஆத்மார்த்தமாகவும் தொடர்பு வைத்திருக்கிற ஜனங்களும் தேசங்களும், இந்த அமைப்புகள் அழிக்கப்பட்டு கொண் டிருக்கையிலும், மகா உபத்திரவத்தில் அவை அழிக்கப்பட்ட பின்பும் அவர்கள் கடுமையாக பரீட்சிக்கப்படுவார்கள். இந்த அமைப்புகள் மீது அக்கினியும் கந்தகமும், அதாவது, முற்றிலுமான அழிவு வருகிறபோது, அதினுடைய உறுப்பினர் கள் யாவருக்கும் அது ஒரு மிகவும் கொடிதான பரீட்சையாக இருக்கும். இந்த பரீட்சையானது ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாக நடைபெறும். அதாவது, நம்முடைய ஆண்டவர் தம்முடைய இரண்டாம் வருகையில் வந்திருக்கையில் சம்பவிக்கும். "**அவர்களுடைய வாதையின் புகை** (இத்தகைய கடுமையான அனுபவங்களின் கீழ் அவர்களுடைய பரீட்சைகளின் நினைவுகள் ஓர் பாடமாக) **சதா காலங்களிலும் எழும்பும்.**" இந்த நினைவுகள் மனுஷருடைய மனங்களில் சதா காலமும் நிலைத்து இருக்கும் என்பதே அதின் கருத்து. மிருகம் மற்றும் அதினுடைய சொரூபத்தின் பொய்யான போதனைகளை ஏற்று கொண்டவர்களுக்கும், அதின் தவறான நடவடிக்கைகளில் பங்குகொண்டவர்களுக்கும், அவை இரண்டின் மீதும் அழிவு வருகிறபொழுது அவர்களுடைய மனதிற்கும் இருதயத்திற்கும் உண்மையான இளைப்பாறுதலிராது.

இதே மனப்பான்மை ஏசா. 33 : 14-ல் தீர்க்கதரி சனமாக விவரிக்கப்பட்டிருக்கிறது. "**சீயோனிலுள்ள** [பெயர்ச்சபையிலுள்ள] **பாவிகள்** [விசுவாசிகள் அல்ல, ஆனால் விசுவாசியாதவர்கள்] **திகைக்கிறார்கள்** [ஏனெனில், இப்பொழுது பிரகாசிக்கிற சத்தியத்தில் அவர்கள் நிலைத்து நிற்காததால் பயப்படுகிறார்கள்]; **மாயக்காரரை நடுக்கம் பிடிக்கிறது.**" பூமியின் மேல் வரும் ஆபத்துக்களை (லூக். 21 : 26) அறிந்து சிந்திக்கிறபடியால் இவர்கள் பயத்துடன், மற்றவர்களுடனும் தங்களுக்குள்ளாகவும் கீழ்க்கண்டவாறு வெளிப்படையாக அல்லாமல் இரகசியமாக சற்றேறக்குறைய நம்பிக்கையுடன் "**பட்சிக்கும் அக்கினிக்கு முன்பாக நம்மில்** [கிறிஸ்தவ மண்டலத்தில்] **தரித்திருப்பவன் யார்?**" என்று கேட்கிறார்கள். [நம்முடைய ஆண்டவர் வெளிப்படுகிறபோது பழிவாங்குகையில், அவர்கள் அக்கினியைக் காண்பார்கள். 2 தெச. 1 : 7, 8; அவர்கள் அழிவுகளைக் கண்டு, இத்தகைய சூழ்நிலையில் யார் இந்த கசப்பான முடிவு வரைக்கும் பிழைத்திருக்க முடியும் என ஆச்சரியப்படுகிறார்கள்]; **நித்திய ஜுவாலைக்கு முன்பாக நம்மில் தாபரிப்பவன் யார் என்கிறார்கள்** ["**அவருடைய கோபாக்கினையின் மகா நாள் வந்துவிட்டது, யார் நிலைநிற்கக்கூடும் என்றார்கள்**" வெளி. 6 : 17;. இங்கே அக்கினியால் சதாகாலமும் யாராவது வாதிக்கப்படுவார்கள் என்று எவ்விதமான குறிப்பும் சொல்லப்படவில்லை. நித்திய அக்கினியானது அக்கினிபோன்ற பரீட்சைகளையும் உபத்திரவ காலத்தில் ஏற்படும் அழிவையும் குறிக்கிறது. வடிவமைக்கப்பட்ட வேலையை முழுவதுமாக முடிக்கும் வரை அழிவு இறுதி வரை தொடரும். அவைகளோடு யார் தயாரிக்க முடியும்? அவர்கள் மத்தியில் யார் தனது ஸ்தானத்தைக் காப்பாற்ற முடியும்?]


பாபிலோனுடைய ஆதரவாளர்கள் யாவரும் பாபிலோனின் '**வாதை**'களாகிய (கிரேக்க பதம் - பாசானிஸ்மோஸ், Basanismos, வச. 7, 15) சாவு, துக்கம் மற்றும் பஞ்சத்தோடு (வச. 8) அவளோடு "**அக்கினியினாலே சுட்டெரிக்கப்படுவார்கள்**" அதாவது முற்றிலுமாக அழிக்கப் படுவார்கள் என வெளி. 18-ஆம் அதிகாரத்திலும் அதின் ஆதரவாளர்களுடைய சோதனைகள் விவரிக்கப்பட்டுள்ளது. அவர்கள் "**அழுது துக்கிப்பார்கள்**" (வச. 15-19) என்று குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள். அதின் பலனாக பரிசுத்த அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசிகளும் (மற்றும் இவர் களுடைய போதனைகளுக்கு இசைவாக இருக்கிறவர் களும்) களிகூருங்கள் எனவும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. (வச. 20). வெளி. 19 : 2, 3 இது சம்பந்தமான குறிப்புகளைக் கொடுக்கிறது. அது என்னவெனில்: "**அவருடைய நியாயத் தீர்ப்புகள் சத்தியமும் நீதியுமானவைகள்.** [அடையாளமான முழு பாபிலோனுக்கு எதிரான தேவனுடைய தீர்மானமும் அதன் நிறைவேற்றுதலும் சத்தியமும் நீதியுமானவைகள்]; **தன் வேசித்தனத்தினாலே** [பூமிக்குரிய அரசாங்கங்களோடு தவறான ஐக்கியம் வைத்ததினாலே] **பூமியை** [சமுதாயத்தை] **கெடுத்த மகா வேசிக்கு அவர் நியாயத்தீர்ப்புக் கொடுத்து** [அழித்து], **தம்முடைய ஊழியக்காரரின் இரத்தத்திற்காக அவளிடத்தில் பழிவாங்கினாரே** [பாபிலோனுடைய கைகளி னால் சுவிசேஷ யுகம் முழுவதும் பெரிதும் துன்பப்பட்ட தம்முடைய ஊழியக்காரர்களின் நிமித்தம் தமது தீர்ப்பி னாலும் அதை நிறைவேற்றியதாலும் பழிவாங்கினாரே] **என்றார்கள்: ............... அவளுடைய புகை என்றென்றைக்கும் எழும்புகிறது என்றார்கள்.**" [பாபிலோ னானது தேவனுடைய நீதியான தண்டனையால் நித்தியமாக அழிக்கப்பட்டது என்று உணருகிற பூரணமாக்கப்பட்ட மனுக்குலத்தின் மனங்களில், இந்த பாபிலோனின் அனுபவங்கள் ஓர் பாடமாக நித்திய காலமாக எழும்பி வரும்].

## மத். 25 : 46-ல் நித்தியமாக தண்டிப்பதைக் குறித்து சொல்லப்படவில்லை

மத். 25 : 31-46 ஆகிய வசனங்கள் வெள்ளாடு செம்மறியாடு குறித்த உவமையைப் பற்றி கூறுகிறது. வச. 41-ல் சொல்லப்பட்டிருக்கும் "**நித்திய அக்கினி**" என்பது அவருடைய நீதிக்கு விரோதமான அனைத்தையும் அழித்து எரிக்கிற தேவனுடைய உக்கிரம் அல்லது கோபத்தின் அக்கினியைக் குறிக்கிறது. (செப். 1 : 18; 3 : 8). முற்றிலுமான அழிவைக் குறித்து ஓர் உருவகமாய் இங்கே சொல்லப் பட்டிருக்கிறது. நித்திய காலமாய் எவர் ஒருவரும் வாதிக்கப்படுவார்கள் என இந்த உவமையில் ஒன்றும் சொல்லப்படவில்லை. மத். 25 : 46 இதற்கு மாறாக போதிக்கிறது. "**இவர்கள்** [திருத்தமுடியாத பாவிகளாகிய வெள்ளாட்டு வகுப்பார்] **நித்திய ஆக்கினையை** [தண்ட னையை] (இங்கே 'ஆக்கினை' என்று தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது; 'ஆக்கினை' என்ற சொல்

லிற்கு பதிலாக 'தண்டனை' என்றே மொழிபெயர்க்கப்பட வேண்டும்; ஆங்கில வேதாகமத்தில் 'punishment' - 'தண்டனை' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளதைக் கவனிக்கவும்) **அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள்**" என்று வாசிக்கிறோம். இங்கே 'நித்தியமாக தண்டிக்கப்படுவார்கள்' அதாவது தண்டிக்கப் பட்டுக் கொண்டே இருப்பார்கள் 'PUNISHING' என்று வசனமானது கூறவில்லை என்பதையும், 'நித்திய தண்டனையை PUNISHMENT அடைவார்கள்' என்றே கூறுகிறது என்பதையும் கவனியுங்கள். வலது பக்கத்தில் நிற்கிற நீதிமான்கள் நித்திய ஜீவனை வெகுமதியாகப் பெற்றுக் கொள்வார்கள் எனவும், மற்ற பக்கத்தில் நிற்கிறவர்கள், அதற்கு நேர்மாறாக துன்மார்க்கருடைய தண்டனையாகிய நித்திய மரணத்தைப் பெறுவார்கள் எனவும் மிக தெளிவாக வேறுபடுத்திக் காட்டப்பட்டிருக்கிறது.

நித்தியமாக 'அறுப்புண்டு போகுதல்' என்ற கருத்தில் அது 'நித்திய தண்டனை' என குறிப்பிடப்பட்டுள்ளது. வச. 46-ல் 'கொலாசீன்' (Kolasin) என்ற கிரேக்க வார்த்தையானது 'தண்டனை' (punishment) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. கொலாசீன் என்ற வார்த்தையானது சிலர் நினைக்கிறது போல, 'வாதித்தல்'-ஐ அர்த்தப்படுத்தாது. இந்த வார்த்தை 'கொலாசோ' (Kolazo) என்ற வினைச்சொல்லில் இருந்து உருவானது. இதனுடைய அடிப்படையான அர்த்தத்தில், ஒரு மரத்தின் கிளைகளை நறுக்கி கவாத்து பண்ணுதல் போல அறுப்புண்டு போகுதல், வெட்டப்படுதல், என்று பொருள்படும். லிட்டெல் மற்றும் ஸ்காட் என்பவர்களுடைய கிரேக்க அகராதியின்படி (Liddle and Scott's Greek lexicon) அதன் அடிப்படை அர்த்தம் "கிளை வெட்டுதல் (கவாத்து பண்ணுதல் - pruning) அல்லது மரங்களின் வளர்ச்சியை பரிசோதித்தல்" என்பதாகும். தாயர் (Thayer) மற்றும் டயக்லாட் (Diaglott) மொழிபெயர்ப்புகளில் வச. 46-ல் "தண்டனை" (punishment) என்பதற்கு பதிலாக "வெட்டுண்டு போகுதல்" (cutting off) என்று உபயோகித்திருக்கிறார்கள்.




உம்முடைய வசனமே சத்தியம்

டயக்லாட் (Diaglott) மொழிபெயர்ப்பின் பக்கங்களின் அடியில் உள்ள குறிப்பு கூறுகிறதென்னவெனில்: பொது மொழிப்பெயர்ப்பும், மற்ற பிற புதிய மொழிபெயர்ப்புகளும் கொலாசீன் ஐயோனியான் (Kolasin aionian) என்ற கிரேக்க வார்த்தைகளுக்கு நித்திய தண்டனை என்றே பொருள் கூறுகின்றன. கொலாசீன் என்ற வார்த்தை அதின் வெவ்வேறு வடிவங்களில் புதிய ஏற்பாட்டில் மூன்று இடங்களில் மட்டுமே காணப்படுகின்றது - அப். 4 : 21; 2 பேது. 2 : 9; 1 யோவா. 4 : 18. இது கொலாசூ (Kolazoo) என்ற வார்த்தையிலிருந்து உருவானது. இது, **(1)** அறுப்புண்டு போகுதல், மரங்களின் கிளைகளை வெட்டுவது போல, கவாத்து பண்ணுதல்; **(2)** தடுத்தல், அடக்குதல் - "தேரோட்டி தன் போர்க் குதிரைகளை அடக்குகிறான் (கொலாசெய், Kolazei)" என்று கிரேக்கர்கள் எழுதுவர்; **(3)** சிட்சித்தல், தண்டனையளித்தல் என்பதைக் குறிக்கிறது. ஒரு தனிமனிதனை ஜீவிக்க விடாதபடி அறுப்புண்டு போகப் பண்ணுவதும் அல்லது வெட்டப்படுவதும் சமுதாயத்திலிருந்து தடை செய்வதென்பதும் 'தண்டனை' என்று கருதப்படும். ஆகையால் இதன் விளைவாக இந்த வார்த்தையின் மூன்றாவது உருவகமான உபயோகம் ஏற்பட்டுள்ளது. இதன் முதன்மையான முக்கியத்துவம் ஏற்றுக் கொள்ளப் பட்டது. ஏனெனில் இது வாக்கியத்தின் இரண்டாம் அங்கத்துடன் சிறந்த முறையில் இசைவாக ஒத்துப்போகிறது. இவ்விதமாக வாக்கியத்தின் எதிர்மறை செய்யுளின் அழுத்தமும் அழகும் பாதுகாக்கப்பட்டுள்ளது. நீதிமான்கள் ஜீவனை அடைவார்கள், துன்மார்க்கர்கள் ஜீவனினின்று அறுப்புண்டு போவார்கள். அதாவது, மரணமடைந்து போவார்கள். 2 தெச. 1 : 9-ஐ பார்க்கவும்.

வேதாகமத்தில் "நரகம்" என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ள அனைத்து கிரேக்க வார்த்தைகளையும், அது எவ்வாறு உபயோகிக்கப்பட்டுள்ளது என்பதையும், நாம் இப்பொழுது ஆராய்ந்து இருக்கிறோம். நரகத்தில் நித்திய வேதனை உண்டு என்று போதிக்கிற சிலர், அதற்கு அடிப்படையாக எடுத்துக்கொள்ளும் பல்வேறுவிதமான வேத வாக்கியங்களை குறைந்தபட்சம் சுருக்கமாகவாவது இப்பொழுது நாம் ஆராய்ந்திருக்கிறோம். நரகம் பற்றி இன்னும் கூடுதலான விளக்கங்களைத் தரும் பத்திரிக்கைகள் வேண்டுமென்போருக்கு மகிழ்ச்சியுடன் இலவசமாக அனுப்பி வைக்கப்படும். இவற்றைக் கருத்தில் கொண்டு பார்க்கையில், வேதாகமத்தில் பாவத்தின் தண்டனையாக, உணர்வோடு (உயிருடன்) நித்தியமாக அக்கினியிலோ அல்லது வேறு எதாவதிலோ வாதிக்கப் படுவதைக் குறித்து ஒரு இடத்திலும் போதிக்கப் படவில்லை என்பது தெளிவாகிறது. மாறாக, வேதாகமம் தெளிவாகக் காட்டுவதென்னவெனில்: ஆதாம் மற்றும் ஏவாள் மீதும், மீதமுள்ள மனுக்குல சந்ததி மீதும் பாவத்திற்காக வைக்கப்பட்ட ஒரே தண்டனை மரணமே ஆகும். (ஆதி. 2 : 17; ரோம. 5 : 12, 18, 19). அதாவது, ஜீவன் அற்று போகுதல் - "**தேவனுடைய கிருபை வரத்தின் மூலமாக**" அல்லாமல் ஒருவரும் நித்திய ஜீவனை பெற இயலாது (ரோம. 6 : 23). தேவன் தம்முடைய பெரிதான அன்பின் காரணமாக, அனைத்து மனுக்குலத்திற்கும் முதலாம் நரகமாகிய (ஹேடீஸ் அல்லது ஷியோல்) முதல் மரணத்திலிருந்து மீட்பை இயேசு கிறிஸ்துவின் மனப்பூர்வமான மீட்கும் பலியினால் ஏற்படுத்தினார் என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. ஆகையால் ஆதாமுக்குள் மரித்துபோன யாவரும் மரித்தோரின் உயிர்த்தெழுதலில் எழுப்பப்படுவார்கள். (யோவா. 5 : 28, 29). ஆனால், விசுவாசத்தின் மூலம் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்ளாதவர்கள் அனைவரும் முடிவில் முற்றிலுமாக, நித்தியமாக, நித்திய அழிவையடைவார்கள். அதாவது, இரண்டாம் மரணமாகிய அக்கினி கடலில் - 'கெஹென்னாவில்' அழிக்கப் படுவார்கள். (வெளி. 21 : 8).

வேதாகம நரகத்தின் அக்கினியானது அழிவை, முழுமையாக அழிந்து போகுதலைக் குறிக்கிறது என்பது தெளிவாயிருக்கிறது. ஏனெனில், அக்கினியானது எதையும்



**ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தின விசேஷம் வரையுள்ள தேவனுடைய வார்த்தை**

பாதுகாக்காது. அது அதன் மீது வைக்கப்படும் எரிகிற தன்மையுடைய பொருட்கள் அனைத்தையும் அழிக்கும். ஆகையால் அக்கினியானது தேவனை குறித்த தேடலின் நித்தியமான தணிக்க முடியாத தாகம் என்ற பில்லி கிரகாமின் கருத்து வேதாகம போதனைகளுக்கு முரண்பாடாக இருக்கிறது. பில்லி கிரகாமும், அவரைப் போன்ற மற்றவர்களும், நித்திய வேதனை கொள்கையைக் குறித்து மன வருத்தத்திலிருக்கிற அநேகர்களும் - BS 508-ஐ பார்க்கவும். இந்த முழு பாடம் சம்பந்தமாக புதிதாக ஆராய்ந்து அல்லது மறு ஆய்வு செய்து, தங்களுடைய நம்பிக்கைகளையும் போதனைகளையும் இதன்படி திருத்திக் கொள்ள இதுவே சிறந்த சமயம் ஆகும். மனுக்குலத்தின் மீது பரலோக பிதாவானவர் கொடுத்த மரண தண்டனையைப் பெரிதுபடுத்தி, மனுக்குல சந்ததியின் கோடிக்கணக்கானவர்களை நித்திய காலமாக அவர் துன்புறுத்துவார் என தவறாகக் காண்பிப்பதால், பூரண ஞானமும், நீதியும், மிகுந்த அன்பும், நற்குணமும் உடையவரை ஞானமில்லாதவராகவும், அநீதியுள்ளவராகவும், அன்பில்லாதவராகவும் சித்தரிக்கின்றனர். அவர்கள் இவ்விதமாக சித்தரிப்பதை நிறுத்திக்கொள்ள இதுவே தகுந்த சமயம் ஆகும்.

அப்படியானால், சிலர் இவ்வாறாக கூறலாம்: "நான் நித்திய வேதனையைப் பற்றி பிரசங்கிக்காவிட்டால், அநேக ஜனங்கள் மத்தியில் நான் பிரபலமாயிருக்க இயலாது; மேலும், சில சபைகளுக்கு பிரசங்கிக்கும்படி அழைக்கப்படவோ அல்லது அனுமதிக்கப்படவோ மாட்டேன்; அவர்களுடைய ஆதரவும் இருக்காது" எனலாம். அப்படிப்பட்டவர்கள் தங்கள் மனதில் வைக்க வேண்டியது என்னவெனில்: மனுஷருடைய அங்கீகாரத்தை விட தேவனுடைய அங்கீகாரத்தை நாடுவது சிறந்தது. இருவருடைய அங்கீகாரத்தையும் நாம் பெற முடியாது. (யோவா. 12 : 43; ரோம. 3 : 4). தேவனுக்கு விரோதமாயிருக்கிற மனந்திரும்பாத பாவிகள் அக்கினியிலோ அல்லது வேறு எதாவதிலோ நித்திய காலமாக வாதிக்கப்படுவார்கள் என நான் பிரசங்கிக்காவிட்டால், அநேகரை நான் மனந்திரும்ப வைக்கவும், கிறிஸ்துவை ஆண்டவராகவும் இரட்சகராகவும் ஏற்றுகொள்ள வைக்கவும் முடியாதே. நான் நித்திய வேதனை உண்டு என்று பிரசங்கிக்கிறபொழுது என்னால் முடிகிறது போல, அது இல்லையென்று பிரசங்கிக்கும் போது முடியாதே. மேலும், மறுமையில் நித்திய வேதனையைக் குறித்து பயப்படும்படி ஜனங்களுக்கு சொல்லாவிட்டால் அவர்கள் மேலும் பெரிய பாவங்களை செய்வார்களே? என சிலர் கேட்கலாம். அதற்கு நாங்கள் சொல்லும் பதில் என்னவென்றால்: நித்திய வேதனையிலிருந்து மாத்திரம் தப்பிக்க வேண்டுமென்ற கட்டாயத்தினால் மனந்திரும்பி கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளுகிறவர்கள் தேவனுடைய அன்பிலும் கிறிஸ்துவினுடைய அன்பிலும் வளரவில்லை. ஆகையால் அவர்கள் தேவனுடைய சுவிசேஷ யுகத்தின் மீதமுள்ள தேவ இராஜ்யத்தின், உண்மையான ஆயிர வருஷத்திற்கு முன்னான கிறிஸ்தவ ஜனங்களோடு ஒரு பங்கைப் பெறுவதற்கு தகுதியானவர்களாய் இருக்க மாட்டார்கள். (2 பேது. 1 : 5-11). தேவனிடத்திலும் கிறிஸ்துவினிடத்திலும் நாம் நெருங்கிச் சேர்வதற்கு நம்மை இயக்கும் சக்திவாய்ந்த நோக்கம் பரலோக பிதாவிடம் நாம் வைக்கும் பயத்தினால் அல்லாமல், அவரிடம் வைக்கும் அன்பினாலேயே இருக்க வேண்டும். அதுவே நம்மை அவரிடம் நெருக்கி வைத்துக் கொள்ளும் (2 கொரி. 5 : 14). தேவன் நீதியான தண்டனையின் மூலமாக ஒவ்வொருவருடைய பாவத்திற்காகவும் தண்டிப்பார், ஆனால் துன்புறுத்தவோ வாதிக்கவோ மாட்டார் என்பதை அனைவருக்கும் நாம் தெளிவுபடுத்த வேண்டும். "**மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்க வேண்டும்:**" "***சிலருடைய பாவங்கள் வெளியரங்கமாயிருந்து நியாயத்தீர்ப்புக்கு முந்திக் கொள்ளும், சிலருடைய பாவங்கள்*** (உயிர்த்தெழுந்த பிற்பாடும்) ***அவர்களைப் பின் தொடரும்***" (மத். 12 : 36, 37; 1 தீமோ. 5 : 24).

Visit us at : **www.biblestandardindia.com**


***For English Magazines, Volumes & Translated Tracts, Booklets & Tamil Magazines Contact :***

**Bro. V. Vincent Jeyakumar**

**Laymen's Home Missionary Movement**

32-D, Dr.Solomon Compound, Near Railway Gate, Nazareth - 628 617

Thoothukudi District, Tamil Nadu, India.

E-mail ID : vincent.v31@gmail.com

Cell : 98949 26629



**FOR PRIVATE CIRCULATION ONLY**